தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

ஆணை நாள். 03.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண்.SA 14637/F/2024

திரு.வீ.இராஜ்குமார், -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
பருகூர்-635 104, -- பொது அதிகார அமைப்பு
கிருஷ்ணகிரி மாவட்டம்.

******

ஆணை

இவ்வாணையம் 22.09.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.ந.சு.டென்சிங், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), பருகூர் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், சொ.சுந்தர்ராஜன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊ), பருகூர் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டம் (தற்போது துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது), ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர்கள் 03.11.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில் மனுதாரர் கோரிய அனைத்து தகவல்களும் கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குநர்கள், தூய்மை பணியாளர்கள் தொடர்புடையது என்பதாலும், ஊராட்சிகளிலும் பணிபுரியும் பணியாளர்களுக்கு கிராம ஊராட்சிகளிலேயே ஊதியம், நிலுவை தொகை மற்றும் இதர படிகள் அனுமதித்து வழங்கப்படுவதாலும், மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களின்

பணிப்பதிவேடுகள் ஊராட்சி செயலர்கள் மூலம் பராமரிக்கப்படுவதாலும் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 5(5)-ன் கீழ் மனு கிடைக்கப்பெற்ற இரண்டு நாட்களில் (உரிய காலத்திற்குள்) மனுதாரருக்கு தகவல்கள் வழங்கிடும் பொருட்டு பருகூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் அனைத்து துணை உதவி பொதுத் தகவல் அலுவலர்கள்/ ஊராட்சி செயலர்களக்கு அலுவலக கடித ந.க.எண்.473/2024/இ3, நாள் 24.04.2024-ன் படி மனு மாற்றம் செய்யப்பட்டு மனுதாரருக்கும் நகல் அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும், இதில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலராகிய தன்னால் காலதாமதம் ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவித்து தனது எழுத்துமூல விளக்கத்தினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்று, ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- ✓ ***மனுதாரரின் 05.04.2024 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவானது தகவல்களை வழங்கும் பொருட்டு ந.க.எண்.473/2024/இ3, நாள் 24.04.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக அனைத்து உதவி பொதுத் தகவல் அலுவலர்கள்/ ஊராட்சி செயலாளர்கள், பருகூர், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர்களுக்கு பொதுத் தகவல் அலுவலரால் கடிதம் அனுப்பப்பட்டும், தகவல்களை வழங்காத உதவிப் பொதுத் தகவல் அலுவலர்கள்/ ஊராட்சி செயலாளர்கள், பருகூர், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 16.12.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அனைத்து உதவிப் பொதுத் தகவல் அலுவலர்கள்/ ஊராட்சி செயலாளர்கள், பருகூர், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர்களுக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேலும், அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் நேரில் முன் நேரில் ஆஜராகுமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.***

ஒம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். SA 14637/F/2024</u>
பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
பருகூர்-635 104,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (05.04.2024 தேதிய)
திரு.சொ.சுந்தர்ராஜன்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
பருகூர் ஊராட்சி ஒன்றியம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

அனைத்து உதவிப் பொதுத் தகவல் அலுவலர்கள்/
ஊராட்சி செயலாளர்கள்,
பருகூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

மனுதாரர்

திரு.வீ.இராஜ்குமார்,
5/333, கரடிகுட்டை தெரு பகுதி,
அங்கிநாயனப்பள்ளி கிராமம்,
8-வது வார்டு அங்கிநாயனப்பள்ளி அஞ்சல்,
ஒப்பதவாடி கிராமம்,
பருகூர் ஊராட்சி, கிருஷ்ணகிரி மாவட்டம்-635 104.

நகல்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For Followup).

Copy to: File NS/PA-